# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1870/63 - 2014 ජුලි මස 10 වැනි බ්‍රහස්පතින්දා - 2014.07.10

*1870/63 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 5/83*

**1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தல் சட்டம்**

*1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தல் சட்டத்தின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 26 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மஹிந்த யாபா அபேவர்த்தன,
கமத்தொழில் அமைச்சர்.

கொழும்பு,
*2014, யூலை 10.*

ஒழுங்குவிதிகள்

*1983 ஆம் ஆண்டின் செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதிய 263/17 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையும், 1997 ஆம் ஆண்டின் பெப்புருவரி மாதம் 7 ஆந் திகதிய 961/15 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி மூலம் திருத்தப்பட்டவாறானவையுமான ஒழுங்குவிதிகள் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன :-*

(i) அதன் 1 ஆம் ஒழுங்குவிதிக்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன் மூலமும்:-

"1. (அ) 6 ஆம் பிரிவின் கீழ் பீடைகொல்லியொன்றுக்கு உரிமமளிப்பதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் பின்வரும் முறையில் இரு தவணைப்பணங்களில் செலுத்தப்படற்பாலதான, ஒரு இலட்சம் ரூபாவைக் கொண்ட ஒரு கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்:-

(i) மீளளிக்கப்படற்பாலதல்லாத கோப்பிடுதற் கட்டணமொன்றாக எழுபத்தையாயிரம் ரூபா; அத்துடன்

(ii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் மேல் பதிவுக் கட்டணமொன்றாக இருபத்தையாயிரம் ரூபா.

(ஆ) மட்டுப்படுத்தப்பட்ட பீடைகொல்லியொன்றின் அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் குழுவின் அங்கீகாரத்துக்கமைய கோப்பிடும் கட்டணமொன்றாக ஆறாயிரத்து ஐந்நூறு ரூபா மற்றும் பதிவுக் கட்டணமொன்றாக நாலாயிரம் ரூபா சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(இ) (i) பீடைகொல்லியொன்றுக்கு உரிமமளிப்பதற்கான விண்ணப்பமொன்று 7 ஆம் பிரிவின் கீழ் நிராகரிக்கப்பட்டதற்கெதிரான; அல்லது

(ii) 7 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று 11 ஆம் பிரிவின் கீழ் இல்லாதாக்கப்பட்டதற்கு, இடைநிறுத்தப்பட்டதற்கு அல்லது திரிபுபடுத்தப்பட்டதற்கு எதிரான,



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

ஒவ்வொரு மேன்முறையீடும் பத்தாயிரம் ரூபாவைக்கொண்ட கட்டணமொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.".

(ii) அதன் 2 ஆம் ஒழுங்குவிதிக்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன் மூலமும்:-

"2. (அ) பீடைகொல்லி தொடர்பில் வழங்கப்பட்ட உரிமமொன்றை மீளப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் நாலாயிரம் ரூபாவைக் கொண்ட ஒரு கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்;

(ஆ) ஆறு ஆண்டுகள் பூர்த்தி செய்ததன் பின்னர் அவருடைய உரிமத்தை பதிவு செய்வதற்கு விரும்புகின்ற உரிமம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், அரசாங்க ஆராய்ச்சி நிறுவகமொன்றிலிருந்து உயிரியல் பயனுடைமைச் சான்றிதழொன்றைப் பெறுதல் வேண்டும்.".

(iii) அதன் 3 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய ஒழுங்குவிதிகளை சேர்ப்பதன் மூலமும்:-

"4. பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் பீடைகொல்லியை இறக்குமதி செய்வதற்கு விரும்புகின்ற எவரேனுமாள், அனுமதிப்பத்திரக் கட்டணமொன்றாக ஆயிரம் ரூபாவைக்கொண்ட கொடுப்பனவுடன் 17 ஆம் பிரிவின் கீழ் பதிவாளரின் எழுத்திலான அங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.

5.(அ) 6 ஆம் பிரிவின் கீழ் முதலாவது தடவையாக பீடைகொல்லிகளின் உரிமமொன்றுக்காக விண்ணப்பிக்கின்றவிடத்து, மூன்றாந் திறத்தவர்களையும், சூழலையும் மற்றும் வன சீவராசி வளங்களையும் பாதுகாப்பதற்கு குறித்த சில பதார்த்தங்களின் சந்தைப்படுத்துதலில் அல்லது விநியோகத்தில் ஆபத்தெதுவும் எற்படாதெனச் சான்றுறுதிப்படுத்துகின்ற பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கள மதிப்பீடொன்றுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) இன் கீழான கள மதிப்பீட்டுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் பின்வரும் முறையில் இரண்டு தவணைக் கொடுப்பனவுகளில் ஒரு இலட்சம் ரூபா கட்டணமொன்றுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்-

(i) மீளச் செலுத்தப்படற்பாலனவல்லாத கோப்பிடுகின்ற கட்டணமாக ஐம்பதினாயிரம் ரூபா; அத்துடன்

(ii) கள மதிப்பீட்டை நிறைவேற்றுவதன் மீதும் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்வதற்கான பதிவுக் கட்டணமொன்றாக ஐம்பதினாயிரம் ரூபா;

ஆயின், மட்டுப்படுத்தப்பட்ட பீடைக்கொல்லியினது இறக்குமதியாளர் எவரும் குழுவின் அங்கீகாரத்துக்கமைவாக (அ) என்னும் பந்தியின் கீழ் கள மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கான தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்படலாம்:

ஆயின், மேலும், இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருகின்ற நாளன்று உரிமத்தை வைத்திருக்கின்ற உரிமம் வைத்திருக்கும் ஒவ்வொருவரும், இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருகின்ற திகதியிலிருந்து ஆறு மாதங்களினுள், இவ்வொழுங்குவிதிகளின் நியதிகளின்படி கள மதிப்பீடொன்றைப் பெறுதல் வேண்டும்.

6. சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய:-

"சட்டம்" என்பது, 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தல் சட்டம் என்று பொருளாகும்;

"உயிரியல் பயனுடைமைச் சான்றிதழ்" என்பது, பீடைகளைக் கட்டுப்படுத்துவதில் பீடைகொல்லியொன்றின் பயனுறுதன்மையைச் சுட்டிக்காட்டி, இயைபான அரசாங்க ஆராய்ச்சி நிறுவகமொன்றினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்று என்று பொருளாகும்;

"குழு" என்பது, 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தல் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பீடைகொல்லிகள் தொழில்நுட்ப மற்றும் மதியுரைக் குழு என்று பொருளாகும்;

"அரசாங்க ஆராய்ச்சி நிறுவகம்" என்பது, பயிர்களின், மனிதரின் மற்றும் விலங்குகளின் உடனலத்தை மேம்படுத்துவதற்கென அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்ட நிறுவகமொன்று என்று பொருளாகும்;

"பதிவாளர்" என்பது, 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தல் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட பீடைகொல்லிகள் பதிவாளர் என்று பொருளாகும்.".

7-787

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.